**கடற்றொழில் நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஆரம்ப தரத்தில் நுட்பவியலாளரல்லாத சேவை வகுதியில் கள உதவுனர் (தொழிலாளி) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.**

ஆரம்ப தரத்தில் நுட்பவியலாளர் அல்லாத சேவை வகுதியில் (PL-I-2016) கள உதவுனர் (தொழிலாளி) பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகைமையுடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ ''பணிப்பாளர் நாயகம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் த.பெ.இலக்கம் 13, பேராதனை'' எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் தபாலிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ''கள உதவுனர் பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்தல்'' எனும் சொற்றொடரை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

01. பதவி : கள உதவுனர் III
இந்தப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.
<u>குறிப்பு</u> : ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு அமையவாகும்

02. மாதாந்த சம்பளத் திட்டம் : ரூபா.24,250-10x250-10x270-10x300-12x330-36,410/-(PL-I-2016)
(சம்பளம் வழங்கப்படுவது, பொ.நி.சு.இலக்கம் 03/2016 இன் உப அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமையவாகும்)
இந்த சம்பள அளவுத்திட்டத்தில் மூன்றாவது படிநிலையை அடைவதற்கு முன்னர் I ஆவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

03. வயது எல்லை : 2018.09.21 ஆம் திகதி அன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் நிரந்தரப்பதவி வகிப்போருக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று)

04. கல்வித் தகைமைகள் : க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது திறமைச் சித்திகள் இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்

05. தொழிற் தகைமைகள் : உரிய துரையில் பெற்றுள்ள தொழிற்தகைமையானது விஷேட தகைமையாகக் கொள்ளப்படும்.

06. அனுபவம் : உரிய துறையில் பெற்றுள்ள அனுபவம் விஷேட தகைமையாகக் கொள்ளப்படும்.

07. உடற்தகைமை : நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யக் கூடியதாக உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

08. ஏனைய தகைமைகள்
i. விண்ணப்பகாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஆட்சோ்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் 2018.09.21 ஆம் திகதிக்கு சகல விதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

09. ஆட்சோ்ப்பு முறை : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற மொத்த புள்ளிகளின் திறமை அடிப்படையில் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைய பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளப்படும்

*** கட்டமைக்கப்பட்ட  நேர்முகப் பரீட்சையின் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் வழங்கப்படும் ***

| | பரீட்சித்து புள்ளி வழங்கப்படுகின்ற பிரதான வகுதிகள் | உச்ச புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| I | மேலதிக கல்வித் தகைமைகள் | 40 | ஏற்புடையதன்று |
| II | தொழிற் தகைமை | 20 | |
| III | அனுபவம் | 35 | |
| IV | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன் | 05 | |
| மொத்தம் | | 100 | |

11 சேவை நிபந்தனைகள்

i. நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர் அரசாங்க கொள்கைத் திட்டங்களுக்கும், அரசாங்க சேவைகள் அணைக்குழுவின் கட்டளைகளுக்கும், நடைமுறை ஒழுங்குவிதி, தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள், நிதிப்பிரமானம் மற்றும் அரசாங்கத்தினல் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற பிரமானங்கள் ஒழுங்கு விதிகள், அமைச்சு மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டவராவர்.

ii. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுத்தப்படுவர். அரசாங்க சேவையில் பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் பெறுவாறேயாயின் அவர் ஒரு வருட கால பதில் கடமை காலப் பகுதிக்கு உட்படுத்தப்படுவர். திறந்த போட்டிப் பரீட்சையின் ஊடாக நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் உரிய முதலாவது தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழி மூலத்திற்கும் மேலதிகமாக, இரண்டாம் மொழி தொடர்பிலான தேர்ச்சியை சேவைக்கு ஈர்ப்புச் செய்யப்பட்டு 05 வருடத்தினுள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

iv. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி : 2018.09.21

v. தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர் உரிய விண்ணப்பத்தை திணைக்கள தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

vi. உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் அடிப்டைத் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் யாவும் அறியத் தராமலேயே நிராகரிக்கப்படும்.

vii. இந்த வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் பிரச்சினை ஏற்படுமாயின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கின்ற அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும்.

டாக்டர் நிஹால் வெதசிங்க
கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகம்
திகதி : 2018.08.**16**
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
த.பெ.இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை.